ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2165 - 2020 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2020.02.28

*2165 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 62 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 65 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மார்ச் மாதம் 06 ஆந் திகதி நண்பகல 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

61 - B 082011 - 353 (2020/02)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள நாரம்மல பிரதேச செயலாளர் எஸ்.எம்.பெத்தாவடு ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.12.15 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர/48645 ஆம் இலக்கம் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான நாரம்மல மெடியகனே எனும் முகவரியில் வசிக்கும் சுமுதுரகே அல்பட் சில்வா என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எப்/91/1657/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.03.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியாமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.03.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தில் அலவ்வ பிரதேச செயலாளர் பிரிவில் (தற்போது நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவின்) தம்பதெனிய ஹத்பத்துவில் உடகஹ மேற்கு கோரளையிலுள்ள மெடியகனே (தற்போது1050, ரியகொல்ல) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மெடியகனே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் எப்/வி/பி. 239 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 265 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.273 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு,

காணியின் பெயர் : மெடியகனே வத்த

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 269, 267 மற்றும் 264 ;
கிழக்கு : மினிகுகுல கிராமம் மற்றும் காணித்துண்டு இலக்கம் 264 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 266 மற்றும் மினிகுகுல கிராமம் ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 266 மற்றும் 267.

எஸ். எம். பெத்தாவடு,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல.
2019, நவெம்பர் 25.

02- 566

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர பிரதேச செயலாளர் கிழக்கு பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டி. எச். எம். என். பீ.தசநாயக ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1986.08.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர/15709 ஆம் இலக்கம் அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹம்மாலிய, பண்டாரகொஸ்வத்த எனும் முகவரியில் வசிக்கும் ரனகொத்பேடி தூரயலாகே மெனிகி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் டி/56/1894/1987 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.12.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியாமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.03.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் திஸ்ஸவ பற்றில்/கோறளையிலுள்ள364 கல்லஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பலுகஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகர் குருநாகல் என்பவரின் பொறுப்பில்வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 11 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/என்பவரால் தயாரிக்கப்பட்டு2300 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் என்பவரால் தயாரிக்கப்பட்ட இரேகை வரைதலில் 113 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.444 ஹெக்டயார்/ஏக்கர் றூட் பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு கலகாவஹேன,

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 114, 117 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 62, 118 2/2 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 111, 112 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 112, 54 பாதை .

டி. எச். எம். என். பீ. தசநாயக,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ் நுவர கிழக்கு.
2019, திசெம்பர் 02.

02-567

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மத்திய மகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாச்சியாதுவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கமுகல பிரசாத் ஷாமிந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய கமுவிலயில் வசிக்கும் ஜயலத் பேடிதுரயலாகே உக்கு என்பவருக்கு அனு/பிர/823 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1982.06.07 ஆந் திகதிய 824 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் /இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என இத்தாளின் மூலம் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2020.03.28 க்கு முன்னர் எழுத்திலான சமர்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம், என்பவரினால் தயாரிக்கப்பட்ட - இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட நீ. நி. அ. மூ. வ. 01 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 568 எனக் காட்டப்பட்டுள்ளதும், அனுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட நாச்சியாதுவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த நுவரகம் கோரளையிலுள்ள 12 ஏ கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த கமுவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஏக்கர் 00 றூட்03 (மூன்று) பேர்ச் 29 (இருபத்தி ஒன்பது) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு மேட்டு நிலம் ,

வடக்கு : காணித்துண்டு இலக்கம் மற்றும் மல்வத்து ஒயா ஓதுக்கீடு நிலம் ;
கிழக்கு : மல்வத்து ஓயா ஒதுக்கீடு நிலம் ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 567 மற்றும் 5ஏ ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 571 பகுதி.

கமுகல பிரசாத் ஷாமிந்த,
பிரதேச செயலாளர்,
நாச்சியாதுவ.

பிரதேச செயலகம்,
நாச்சியாதுவ.
2019, திசெம்பர் 17.

02-659/1

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாச்சியாதுவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கமுகல பிரசாத் ஷாமிந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1982 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய கமுவிலயில் வசிக்கும் ராஜபக்ஷ பேடிகே சசிரா என்பவருக்கு அனு/பிர/931 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்ட அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1982.06.07 ஆந் திகதிய 932 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால் /இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என இத்தாளின் மூலம் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2020.03.28 க்கு முன்னர் எழுத்திலான சமர்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம், என்பவரினால் தயாரிக்கப்பட்ட - இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட நீ. நி. அ. மூ. வ. 01 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 597 எனக் காட்டப்பட்டுள்ளதும், அநுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட நாச்சியாதுவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த நுவரகம் கோரளையிலுள்ள இலக்கம் 12A கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த கமுவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஏக்கர் 00 (பூச்சியம்), ஏக்கர் 01 (ஒன்று), றூட்03 (மூன்று), பேர்ச் 10 (பத்து) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு.

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 5A (பாதை) மற்றும் 596;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 596 ;
தெற்கு : வெளிக்கால்வாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 604 மற்றும் 605.

கமுகல பிரசாத் ஷாமிந்த,
பிரதேச செயலாளர்,
நாச்சியாதுவ.

பிரதேச செயலகம்,
நாச்சியாதுவ.
2019, திசெம்பர் 17.

02-659/2

*இணைப்பு 9*

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள நாச்சியாதுவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் கமுகல பிரசாத் ஷாமிந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய வழங்கப்பட்டுள்ள அனு/நெநுப/பிர/2758 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான, சுச்சரிதகம அநுராதபுரம் எனும் முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷ பேடிகே சைமன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1997.05.09 ஆந் திகதிய 169/158 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால்/பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பு பத்திரத்தை மேற்கூரிய சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2020.03.28 க்கு முன்னர் எழுத்திலான சமர்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் நில அளவை நாயகம், என்பவரினால் தயாரிக்கப்பட்ட - இலக்க துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து நில அளவை நாயகம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட நீ. நி. அ. மு. வ. 01 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 596 எனக் காட்டப்பட்டுள்ளதும், அநுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட நாச்சியாதுவ பிரதேச செயலாளர் அலுவலக பிரிவைச் சேர்ந்த நுவரகம் கோரளையிலுள்ள இலக்கம் 274 கிராம அலுவலக பிரிவைச் சேர்ந்த உதுரு கமுவில எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஹெக்டயர் 00 ஏக்கர் 01 றூட் 00 பேர்ச் 26 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி இதன் எல்லைகள் வருமாறு.

வடக்கு : நீ. நி. ஆ. மு. வ. 01யின் கால்வாய் இட ஒதுக்கீடு காணித்துண்டு இலக்கம் 595;
கிழக்கு : நீ. நி. ஆ. மு. வ. 01யின காணித்துண்டு இலக்கம் 595 ;
தெற்கு : நீ. நி. ஆ. மு. வ. 01யின கால்வாய் இட ஒதுக்கீடு காணித்துண்டு இலக்கம் 597;
மேற்கு : நீ. நி. ஆ. மு. வ. 01யின் காணித்துண்டு இலக்கம் 597.

கமுகல பிரசாத் ஷாமிந்த,
பிரதேச செயலாளர்,
நாச்சாதுவ.

பிரதேச செயலகம்,
நாச்சாதுவ.
2019, திசெம்பர் 17.

02-659/3

---

*இணைப்பு 9*

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் பது/பிர 10921 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பண்டாரவளை கொலதென்ன முகவரியில் வசிக்கும் பாதன முதியன்சேலாகே முத்துபண்டா என்பவருக்கு 1988, மாச்சு 04 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் பதுளை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப் பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ, அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், ஊவா மாகாண சபையின் பண்டாரவளை பிரதேசச் செயலாளராகிய டீ. எம். இந்திரா திசானாயக ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பிரிவின் கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2020.03.27 க்கு முன்னர் எழுத்திலான சமர்பணம் மூலம் எனக்கு தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

பதுளை நிருவாக மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேசச் செயலாளர் பிரிவின் மகா பளாத பற்றில்/கோறளையில் கிணிகம கிராம அலுவலரின் பகுதியில் உள்ள கிணிகம கிராமத்தில் அமைந்துள்ளதும், பதுளை மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையியல் அதிகாரசபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 45 ஆம் இலக்க களத்தாளில் இலக்க வரைபடத்தில் அ.க.பி. 19 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் அ. க. பி 19 ஆம் இலக்க உருவப்படத்தில் 1119 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 0.093 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி,

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 18;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1120 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1115;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1118.

ஜீ. ஜீ. என். குணரத்ன,
பிரதேச செயலாளர்,
பண்டாரவளை.

பிரதேச செயலகம்,
பண்டாரவளை.
2019, நவெம்பர் 29.

02-660

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/60503.
மாகாண பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : நிஇகொ/ ஹம்/ இ2/சூரி/தீபது/09.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாந்தோட்ட மாவட்டம் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 136 வதிவெவ கிராம அலுவலர் பிரிவைச சேர்ந்த வதிவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்.ரி.பி. 04 பிற்சேர்க்கை இலக்க 151, 455 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சி 6023 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் C 6022 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் C 6022 மற்றும் C 6028;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் C 6028, C 6024 மற்றும் C 6021 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் C 6024, C 6021 மற்றும் C 6020.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2019.07.08 ஆம் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில், குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட. சந்தைப் பெறுமதியில், 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும் 2019 ஆம் வருடத்திற்கு மதிப்பிடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இந்தக் குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியின் இறுதி வருடத்தில் அறவிடப்பட்ட தொகையின் 20% கூட்டி வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

*தவணைப்பணம்.*- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) 2019.07.08 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவுபெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்குவிடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், மாகாண காணி ஆணையாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத மெதுர''.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, பெப்புருவரி 28.

02-565

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/28349.
மாகாண காணி ஆணையாளரின்
இல. : KN/LTL/703

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மகதிவுல்வெவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மகதிவுல்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் கடத்திரல் வரைபட இலக்கம் 260187 இல் காணித்துண்டு இலக்கம் 68 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0475 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு திருமதி முனசிங்க விதானகே இந்திரானி முனசிங்க என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 47 மற்றும் 67 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 47 மற்றும் 67 TOPO PP 33 இன் காணித்துண்டு இல.240 ;
தெற்கு : TOPO PP 33 இன் 240 மற்றும் காணித்துண்டு இல. 69 ;
மேற்கு : காணித்துண்டு இல 69.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆம் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- 1995 வருடத்திற்கான பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

**தவணைப் பணம்.**- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத் தநகை அனுமதிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செயப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பெயருகு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, பெப்புருவரி 28.

02-661

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/45059.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : மா. கா. ஆ/06/களு/148

**முடிக்குரிய காணி பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

களுத்துறை மாவட்டம் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 821 C அமரகெதர வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் 19/2013 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் C எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0862 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சங்கத்தின் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு வரையறுக்கப்பட்ட அமரகெதர சிக்கனம் மற்றும் கடன் உதவிக் கூட்டுறவு சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| வடக்கு | : | 19/2013 ஆம் இலக்கச் சுவடு வரைபடத்தில் கா. து B மற்றும் FTP 03 இல் கா.து இல 1726 |
| கிழக்கு | : | FTP 03 இல் கா. து. இல 1726 மற்றும் 19/2013 ஆம் இலக்கச் சுவடு வரைபடத்தில் கா. து. D |
| தெற்கு | : | 19/2013 ஆம் இலக்கச் சுவடு வரைபடத்தில் கா.து. D மற்றும் பாதை |
| மேற்கு | : | பாதை |

03. குறித்தகாணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) குத்தகைக் காலம் :- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதி வழங்கிய 2019.10.18 ஆம் திகதியிலிருந்து முன்னோக்கி)

(ஆ) வருடாந்தக் குத்தகை :-பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அனுமதி வழங்கிய வருடத்திற்கான அபிவிருதிதி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்த குத்தகையாக செலுத்தப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருடகாலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(உ) பிரதேசச் செயலாளர், மாகாண காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) குத்தகை தொடங்கிய 2019.10.18 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கதக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

W. H. A. S. நதீஸானி,
உதவி காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர"
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2020, பெப்புருவரி 28

02-610

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.